


**09.05.2025**

**தலைப்பு செய்திகள்**

- நாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து முப்படை தலைவர்களுடன் மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தலைமையில் புதுதில்லியில் இன்று உயர்மட்ட ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.
- பாதுகாப்பு படைகளின் செயல்பாடுகளை நேரடியாக ஒளிபரப்பு செய்வதை ஊடகங்கள் தவிர்க்க வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.
- ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள தமிழக மாணாக்கரை பத்திரமாக மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.
- பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் முன்னனி மாநிலமாக திகழ்வதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
- தைபே ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி - கனடாவின் பிரயன் யங்கை இன்று எதிர்கொள்கிறார்.

**இனி விரிவான செய்திகள்**

**************

**ராஜ்நாத்சிங்**

நாட்டின் மேற்கு எல்லையில் பாதுகாப்பு நிலைமை மற்றும் ஆயுதபடைகளின் தயார்நிலையை மறு ஆய்வு செய்வது தொடர்பாக மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தலைமையில் புதுதில்லியில் இன்று உயர்மட்ட ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பாதுகாப்பு படை தலைவர் ஜெனரல் அனில் சவ்ஹான்,

கடற்படை தலைவர் அட்மிரல் தினேஷ் கே திரிபாதி,

ராணுவ தலைவர் ஜென்ரல் உபேந்திரா திவேதி

விமான படை தளபதி அமர்ப்ரீத் சிங் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதனிடையே மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா எல்லை பாதுகாப்பு படை மற்றும் வான் பாதுகாப்பு படை உயர் அதிகாரிகளுடன் முக்கிய ஆலோசனை மேற்கொள்ள உள்ளார்.

**********

பிரதமர்

முன்னதாக இந்தியா பாகிஸ்தான் இடையேயான போர் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில் பிரதமர் திரு.நரேந்திரமோடி புதுதில்லியில் உயர்மட்ட ஆலோசனை மேற்கொண்டார்.

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங்,

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு.அஜித்தோவல்,

முப்படை தளபதிகள் மற்றும் ராணுவ அதிகாரிகள் இந்த ஆலோசனையில் பங்கேற்றனர்..

நாட்டின் பாதுகாப்பு, இறையான்மை, உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து இதில் முக்கியமாக விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

**********

**ஊடகங்கள் அறிவுறுத்தல்**

நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு படைகளின் நடமாட்டத்தை நேரடியாக ஒலிபரப்பு செய்வது, நிகழ்நேர அறிக்கைகளை வெளியிடுவது உள்ளிட்டவைகளை ஊடகங்கள் தவிர்க்க வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இத்தகைய நேரலைகளால் மனித உணர்வுகள் மற்றும் செயல்பாட்டு திறன் பாதிப்படையும் என்று எச்சரித்துள்ளது.

நாட்டின் சேவையில் மிக உயர் தரத்தை நிலைநிறுத்தி செய்தி சேகரிப்பில் விழிப்புணர்வு, உணர்திறன் மற்றும் பொறுப்புடன் நடந்துகொள்ள ஊடகங்களை அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

இதனிடையே தாக்குதல் தொடர்பாக சமூக வலைதளங்களில் உண்மைக்கு புறம்பாக வெளியாகும் தகவல்களை மத்திய பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் உண்மை சரிபார்ப்பு குழு மறுத்துள்ளது.

பழைய புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பயன்படுத்தி குஜராத் ஹசிரா துறைமுகம் ஜலந்தர் உள்ளிட்ட பகுதிகளில் பாகிஸ்தான் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியதாக பரவும் செய்திகள் போலியானவை என்றும் கூறியுள்ளது.

இதேபோல் ஏ.டி.எம் மையங்கள் 3 நாட்களுக்கு மூடப்படும் என்று வெளியாகும் போலி வாட்ஸ் அப் செய்திகளை பகிர வேண்டாம் என்றும் அறிவுறுத்தியுள்ளது.

**********

**விமானம் - சிறப்பு ரயில்**

நாடுமுழுவதும் உள்ள விமான நிலையங்கள் பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத் உள்ளிட்ட மாநிலங்கள் மற்றும் கஷ்மீரில் உள்ள 24 விமான நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

பயணிகள் 3 மணிநேரம் முன்னதாகவே விமான நிலையத்திற்குள் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

டெல்லி இந்திராகாந்தி விமான நிலையம், சென்னை விமான நிலையம் உள்ளிட்ட விமான நிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் வழக்கம் போல் விமான சேவைகள் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஜம்மு காஷ்மீரில் விமான நிலையம் மூடப்பட்டதை அடுத்து பயணிகளின் வசதிக்காக ஜம்மு மற்றும் உத்தம்பூரிலிருந்து புதுதில்லிக்கு 3 சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

**********

**இந்திய ராணுவம்**

இந்தியாவின் மேற்கு எல்லை பகுதியில் ட்ரோன்கள் மற்றும் பிற ஆயுதங்களை பயன்படுத்தி பாகிஸ்தான் நடத்திய பல்வேறு தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டுள்ளதாக இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

எல்லை கட்டுப்பாட்டு பகுதியில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிய பாகிஸ்தான் பாதுகாப்பு படையினருக்கு தக்க பதிலடி கொடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் இறையான்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாப்பதில் உறுதியாக இருப்பதாகவும் அனைத்து தீய நோக்கங்களுக்கும் வலுவான உரிய பதிலடி வழங்கப்படும் என்றும் இந்திய ராணுவம் அறிவித்துள்ளது.

**********

**தீவிரவாதிகள்**

இதனிடையே ஜம்மு காஷ்மீரின் சம்பா மாவட்டத்தில் ஊடுருவ முயன்ற 7 தீவிரவாதிகளை பாதுகாப்பு படையினர் இன்றுகாலை சுட்டுக்கொன்றனர்.

இலங்கையின் வான்வெளியை பயன்படுத்தி மற்றொரு நாட்டை தாக்குவதற்கு இலங்கை அரசு அனுமதிக்காது என அந்நாட்டு அமைச்சரவை செய்திதொடர்பாளர் டாக்டர் நலிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இந்தியா பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவி வரும் நிலையில் பிராந்திய அமைதியை சீர்குலைக்கும் எவ்வித முயற்சிக்கும் இலங்கை இடமளிக்காது என்று குறிப்பிட்டுள்ளார்.

**********

**போர் பதற்றம் - இந்தியன் ஆயில்**

பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு சிலிண்டர் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக இந்திய எண்ணெய் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனவே பொதுமக்கள் இதுகுறித்து பீதி அடைய வேண்டாம் என்றும் பெட்ரோல், டீசலை தேவைக்கு அதிகமாக இருப்பு வைக்க வேண்டாம் என்றும் இந்நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

**********

**சண்டிகர் அபாய ஒலி**

சண்டிகரில் வான்வெளி தாக்குதல் நடத்தப்படலாம் என்ற தகவலை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இன்று அடுத்தடுத்து அபாய ஒலி எழுப்பபட்டது.

பொதுமக்கள் அனைவரும் வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம் என்றும், ஜன்னல்கள் அருகே நிற்க வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**********

**ஜம்மு - தமிழக மாணவர்கள்**

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள தமிழகத்தை சேர்ந்த மாணாக்கர் பாதுகாப்புடன் இருப்பதாகவும், அவர்களை பத்திரமாக மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

கஷ்மீரில் உள்ள தமிழக மாணாக்கரை தொடர்பு கொள்ள இலவச உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் 24 மணிநேரமும் செயல்படும் உதவி மையமும் அமைக்கப்பட்டுள்ளது.

**********

**முதலமைச்சர் - பேரணி**

பாகிஸ்தான் தீவிரவாத தாக்குதலுக்கு எதிராகவும் இந்திய ராணுவத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னையில் நாளை பேரணி நடைபெறுகிறது.

முன்னாள் படைவீரர்கள், மாநில அமைச்சர்கள், பொதுமக்கள், மாணாக்கர் உள்ளிட்டோர் பங்கேற்கும் இப்பேரணி சென்னை காவல்துறை இயக்குனர் அலுவலகத்தில் இருந்து போர் நினைவு சின்னம் வரை நடைபெறும்.

**********

**கூடங்குளம்**

நெல்லை மாவட்டம் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் போர் பாதுகாப்பு ஒத்திகை இன்றுமாலை நடைபெறுகிறது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

**********

**சேலம் ஆயுதபடை**

சேலம் மாவட்ட ஆயுதபடை மைதானத்தில் கலவரம் ஏற்பட்டால் அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்த தத்ரூப பயிற்சி இன்று நடைபெற்றது.

**********

**முதலமைச்சர்**

பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் முன்னனி மாநிலமாக திகழ்வதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருச்சி பஞ்சப்பூரில் 408 கோடியே 36 லட்ச ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தை இன்று திறந்துவைத்து பேசிய அவர், அதிவேக வளர்ச்சியுடன் மாநிலத்தில் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றார்.

**வாய்ஸ்**

இந்நிகழ்ச்சியில் பஹல்காம் தாக்குதலில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஒரு நிமிடம் மௌண அஞ்சலி செலுத்தப்பட்டது.

**********

**எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம்**

தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகம் மற்றும் அண்ணாமலை பல்கலைகழகத்தில் வரும் கல்வியாண்டிற்கான இளநிலை அறிவியல் பட்டப்படிப்பு மற்றும் பட்டய படிப்பிற்கான மாணாக்கர் சேர்க்கைக்கு இன்றுமுதல் விண்ணப்பிக்கலாம் என மாநில வேளாண் அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மாணாக்கர் அடுத்த மாதம் 8ஆம் தேதிவரை tnau.ucanapply.com என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என்றார்.

**********

**பொதுவிநியோக குறைதீர் கூட்டம்**

தமிழகத்தில் பொதுவிநியோக திட்ட குறைதீர் நாள் கூட்டம் நாளை நடைபெறுகிறது.

பொதுமக்கள் குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், நீக்கம், முகவரி மாற்றம், புதிய குடும்ப அட்டை உள்ளிட்டவற்றிற்கு இதில் விண்ணப்பித்து பயன்பெறலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**********

**இருவரி**

**சுதந்திர போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன்** விழாவை முன்னிட்டு சென்னை கிண்டியில் உள்ள அன்னாரது திருவுருவ படத்திற்கு மாநில அமைச்சர்கள்

திரு.தா.மோ.அன்பரசன் திரு.மா.சுப்பிரமணியன் உள்ளிட்டோர் தமிழக அரசின் சார்பில் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

**பாரதிதாசன் இளம் படைப்பாளர் விருது** பெற விரும்பும் 35 வயதிலிருந்து 45 வயதிற்குட்பட்ட இளம் எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்கள் வரும் 23ஆம் தேதிக்குள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என தமிழ் வளர்ச்சித்துறை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

**நாமக்கல் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில்** பிரதமரின் தேசிய தொழில் பழகுநர் சேர்க்கை முகாம் வரும் 13ஆம் தேதி நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் டாக்டர் உமா தெரிவித்துள்ளார்.

**திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அருகே** இன்று நடைபெற்ற எருதுவிடும் திருவிழாவில் 200க்கும் மேற்பட்ட காளைகள் களமிறங்கின.

**********

**ரோஜா கண்காட்சி**

உதகை ரோஜா பூங்காவில் 20ஆவது ரோஜா கண்காட்சி நாளை தொடங்குகிறது.

கடல்வாழ் உயிரினங்களின் உருவங்களை ரோஜா மலர்களை கொண்டு வடிவமைக்கும் பணிகள் அங்கு மும்முரமாக நடைபெற்று வருகிறது.

**********

ரயில்

நீலகிரி மாவட்டம் மேட்டுப்பாளையம் உதகை இடையேயான மலை ரயில் சேவை இன்று ரத்து செய்யப்பட்டுள்ளது.

**இதுகுறித்து எமது செய்தியாளர் :**

**வாய்ஸ்**

**********

**கோவில்**

மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவில் சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் வரும் திங்கட் கிழமை நடைபெறும்.

**********

**பேட்மிண்டன்**

தைபே ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி -கனடாவின் பிரயன் யங்கை இன்று எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் காலிறுதியில் உன்னாட்டி ஹூடா - தைவானின் இ-டிங்-ஹங்குடன் மோதுகிறார்.

**********

**ஸ்குவாஷ்**

உலக ஸ்குவாஷ் சேம்பியன் பட்ட போட்டிகள் சிகாகோவில் இன்று தொடங்குகிறது.

வரும் 17ஆம் தேதிவரை நடைபெற உள்ள இப்போட்டியில் அனாஹத் சிங் தலைமையில் இந்திய வீரர்கள் களமிறங்குகின்றனர்.

**********

**கால்பந்து**

19 வயதிற்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் பட்ட போட்டி அருணாச்சல பிரதேச மாநிலத்தில் இன்று தொடங்குகிறது.

வரும் 18-ம் தேதிவரை நடைபெறும் இப்போட்டியில் இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், மாலத்தீவு, இலங்கை, நேபாளம் ஆகிய 6 நாடுகள் பங்கேற்கின்றன.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

**********